தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre Homebush Inc.
PO Box 4032, Homebush, NSW 2140.

## பேச்சுப் போட்டி 2024 ஆண்டு 3

அனைவருக்கும் வணக்கம்

# கல்வியின் சிறப்பு

உலகில் சிறந்த செல்வம் கல்விச் செல்வமே. கல்விச் செல்வமானது அழிவில்லாதது. என்றும் நிலைத்து எம்முடன் நிற்கக் கூடியது.

மனிதரிடத்தில் இருக்கின்ற அறியாமையைப் போக்கி அறிவு ஒளி ஊட்டுவது கல்வி. கல்வியை வெள்ளம் அடித்துச் செல்லாது. தீ சுட்டுப் பொசுக்காது.

கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டு.

"எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்க வேண்டியவற்றைக் கற்று, கற்ற நெறிப்படி ஒழுக வேண்டும்.

இதனையே வள்ளுவர்

"கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக" என்றார்.

எல்லா வித அழகுகளிலும் ஒருவனுக்குக் கல்வி அறிவே சிறந்த அழகாகும்.

நன்றி

வணக்கம்